# கடைசி நிமிடத் தயாரிப்பு (1:1-11)

ஹாலிவுட்டின் குறிப்பிடத்தக்க ஒரு திரைப்படத் தயாரிப்பாளர், ஒரு திரைப்படமானது பூமியதிர்ச்சி போன்ற தொடக்கத்தைக் கொண்டு, உச்சக்காட்சியை நோக்கித் தயாரிக்கப்பட வேண்டும் என்று கூறினார். இவ்வடிப்படையில் பார்த்தால், நடபடிகள் நூலின் இரண்டாம் அதிகாரம் பலத்த காற்று அடிக்கும் முழக்கத்துடன் அக்கினிமயமான நாவுகள் வடிவில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வருதல் என்ற மாபெரும் துவக்கத்துடன் ஆரம்பிக்கிறது! சத்தங்கள் மற்றும் உணர்ச்சிப் பெருக்குடன் தொடங்குவதற்குப் பதில், முதலாம் அதிகாரம் அமைதியுடன் ஆரம்பிக்கின்றது. இது இயேசு தமது அப்போஸ்தலர்களுடன் பேசுவதில் தொடங்கி, முக்கிய கூட்டம் ஒன்றுடன் முடிவடைகிறது! முக்கிய கூட்டங்கள் வழக்கமாக உணர்ச்சிப் பெருக்கெதுவும் இன்றியே (கொட்டாவி விடுவதாகவே) உள்ளன.

நடபடிகள் நூல் ஏன் இவ்விதமாய் ஆரம்பிக்க வேண்டும்? நடபடிகள் 2ல் உள்ளது போன்ற மாபெரும் நாளுக்கு தயாரிப்பு தேவையென்பதே காரணம். நடபடிகள் 2ல் காணும் நிகழ்வுக்காக தேவன் நித்திய நித்தியமாய் ஆயத்தம் செய்து கொண்டிருந்தார் (எபே. 3:9-11) - ஆனால் இப்பொழுதோ கடைசி நிமிடத் தயாரிப்புக்கான காலம் வந்தது. குறிப்பாக அப்போஸ்தலர்களை கடைசி நிமிடத்தில் ஆயத்தம் செய்ய வேண்டியிருந்தது.

இவ்வதிகாரத்தில் நமக்கு அநேக பாடங்கள் உள்ளன. விசேஷமாக தேவனுடைய ஊழியத்தை செய்ய நாம் போதிய அளவு தயாரிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நாம் கற்க வேண்டும்.

# மறு கண்ணோட்டம் தரப்பட்டது
# *(1:1-5)*

*லூக்கா, வாசகர்களுக்கு தாம் முன்னதாக எழுதியவைகளை நினைவூட்டுவதிலிருந்து இந்நூலை தொடங்குகிறார்: "தெயோப்பிலுவே, இயேசுவானவர் ... எடுத்துக் கொள்ளப் பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும்[1] தொடங் கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டு பண்ணினேன்" (நட. 1:1அ, 2). "முதலாம் பிரபந்தம்" என்பது லூக்கா சுவிசேஷத்தைக் குறிக்கிறது. லூக்கா ''முதலாம் பிரபந்தத்தைப்'' பற்றி நடபடிகள் நூலில் நினைவூட்டி யிருப்பதால், வாசிப்பவர் லூக்கா சுவிசேஷம் பற்றி, விசேஷ மாக அதன் கடைசி அதிகாரங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்.*

*இயேசு பரத்துக்கேறுதலும், அப்போஸ்தலர்கள் எருசலே முக்குத் திரும்புதலுமே லூக்கா சுவிசேஷத்தின் நிறைவுக் காட்சியாகும் (லூக். 24:50-53). நட. 1ல் "இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு'' அவர் உயர எடுத்துக் கொள்ளப் பட்டதாக நாம் வாசிக்கிறோம் (வ. 2ஆ). லூக்கா சுவிசேஷத்தில் ''இக்கட்டளை'', அந்த அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்கு "சாட்சிகளாயிருந்து" "மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பை யும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்க வேண்டும்" (24:47) என்றும் நாம் காண்கின்றோம். அதாவது, ''கட்டளை'' என்பது பிரதான கட்டளையைக் குறிக்கிறது (மத். 28:18-20; மாற். 16:15, 16).*

*தமது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இயேசு அப்போஸ்தலர் களுக்குத் தரிசனமாகி, அவர்கள் தமக்கு சாட்சிகளாயிருக்கும் படி அவர்களைத் தகுதிப்படுத்தினார் என்பதாக நடபடி. 1:3ல் லூக்கா குறிப்பிட்டுள்ளார்: "அவர் பாடுபட்ட பின்பு நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய இராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடன் பேசி, அநேக தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்.'' லூக்கா தமது சுவிசேஷ நூலில் இயேசுவால் தரப்பட்ட தெளிவான*

*திருஷ்டாந்தங்களுக்கு எடுத்துக்காட்டுகளைத் தந்துள்ளார்: இயேசுவை அப்போஸ்தலர்கள் தொட்டுப் பார்த்திருக்கிறார்கள், அவர் தாம் ஒரு ஆவியல்ல என்று அவர்களுக்குக் காட்டுவதற்காக அவர்களோடு போஜனம் பண்ணியிருக்கிறார் (லூக். 24:36-43; அப். 10:40, 41).*

*இயேசு உயிர்த்தெழுந்த பின்பு தரிசனமான நிகழ்ச்சிகளாகப் பதிவு செய்யப்பட்டவைகளில் பல, அவர் உயிர்த்தெழுந்த அன்றைய தினமே நடைபெற்றவைகளாயிருக்கின்றன. வசனம் 3ல், இயேசு நாற்பது நாளளவும் அநேக முறை தரிசனம்[2] தந்துள்ளதாக (இது ஒரு நீண்ட காலமாகும்; அப். 13:31) நாம் வாசிக்கிறோம். பார்க்ளேயின் மொழிபெயர்ப்பில்: "இயேசு நாற்பது நாட்களுமே பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களுக்குக் காட்சியளித்தார்" என்றுள்ளது.*

*இயேசு, தமது சிநேகிதர்களுடன் வெறுமே ஐக்கியமாயிருப்பதற்கு மட்டும் அந்த நாற்பது நாட்களாக இப்பூமியில் இருந்திருக்கவில்லை. மாறாக, தமது அப்போஸ்தலர்களைத் தயார் செய்வதற்காகவே தாம் பரத்துக்கேறுதலைத் தாமதப்படுத்தினார். இயேசு, "தேவனுடைய இராஜ்யத்துக்குரியவைகளை அவர்களோடே பேசினார்" (வ. 3ஆ). இயேசு தமது சொந்த ஊழியத்தின் ஆரம்ப முதற் கொண்டே "இராஜ்யத்தை" தமது பிரதான கருத்தாகக் கொண்டிருந்தார் (மத். 4:17). அவருடைய அநேக மாபெரும் உவமைகள், "பரலோக இராஜ்யம் இது போலுள்ளது ..." என்றே துவங்கியிருக்கின்றன (மத். 13:31, 33, 44, 45, 47). இப்பொழுது இயேசு இராஜ்யத்தைக் குறித்த தமது போதனைக் கருத்துக்களை தமது சீஷர்களின் மனதில் மறுபடியும் பதியவைக்கிறார். இராஜ்யம் பலத்தோடே வரும் என்பது அவர் நினைப்பூட்டிய மற்ற எல்லா விஷயங்களோடும் சேர்ந்திருந்தது: "... இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லை ..." (மாற். 9:1).*

*நீங்களும், நானும் பெரிய ஊழியங்களுக்கு நம்மைத் தயார் செய்கின்ற வேளையில், கர்த்தருடைய போதனைகளை, நமக்கு நாமே நினைவு கூறுவதும், "கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்" (சங். 126:3) என்று எண்ணிப் பார்ப்பதும் பயனுள்ளதாகும்.*

# ஒரு ஆளுகை வாக்களிக்கப்பட்டது (1:4-8)

இராஜ்யத்தைப் பற்றித் தமது சீஷர்களுக்குப் போதிக்கையில் இயேசு ஒரு பெரிய தடையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. "இராஜ்யம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தும் போது இயேசுவின் மனதில் கருத்து ஒன்று இருந்தது; அப்போஸ்தலர்கள் "இராஜ்யம்" என்ற வார்த்தையைக் கேட்டபொழுது அவர்களின் மனதில் வேறொரு கருத்து இருந்தது. ஆவிக்குரிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, தேவன் தமது ஜனங்களின் இருதயங்களிலும், வாழ்க்கையிலும் ஆளுகை செய்வதைப்பற்றி இயேசு தமது சிந்தனையில் எண்ணங் கொண்டிருந்தார். இயேசுவின் சீஷர்களோ, பூமிக்குரிய இராஜ்யத்தைப் பற்றி - மேசியா வந்து இஸ்ரவேலர்களின் விரோதிகளைத் தோற்கச் செய்து, எருசலேமில் தமது சிங்காசனத்தில் அமருவதைப் பற்றி - எண்ணம் கொண்டிருந்தார்கள்.[3] இயேசு, தமது இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல என்று வலியுறுத்திக் கூறினார் (யோவா. 18:36); ஆனால் அவருடைய அப்போஸ்தலர்களுக்கு இது புரிந்து கொள்ளக் கடினமாயிருந்தது.

அப்போஸ்தலர்களின் புரிந்துகொள்ளுதலில் உள்ள குறைபாடே நட. 1:4-8ன் பின்னணியாகும். இவ்வசனங்களில் இயேசு ஆச்சரியமான வாக்குத்தத்தம் ஒன்றைத் தருகின்றார்; இதுவே அவர்களது தயாரிப்பில் மிக முக்கியமான பாகம் ஆகும். அப்போஸ்தலர்கள் ஒரு அரசியல் ரீதியான ஸ்தாபனத்தையும் அதில் தங்களுக்கு கனம் பொருந்திய பதவிகளையும் எதிர் நோக்கிக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களுக்கு அதைக் காட்டிலும் சிறப்பான திட்டம், அவர்கள் எதிர்பார்க்கும் எதையும் விட நல்ல திட்டம் ஒன்றை, தேவன் வைத்து இருந்ததை அவர்கள் உணர வேண்டும் என்று இயேசு விரும்பினார். அவர்கள் பதவியை எதிர்பார்த்தனர்; ஆனால் அவர்கள் பலத்தைப் பெறுவார்கள் என்று இயேசு கூறினார்.

> அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது,[4] அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.

*ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (வ. 4, 5).*

*முன்னரே, பிதாவானவர் இயேசு மற்றும் சிலர் மூலமாக இராஜ்யம் "சமீபித்திருந்ததாக" வாக்களித்திருந்தார் (மத். 4:17); இராஜ்யத்தை ஸ்தாபிப்பதாகத் தரப்பட்ட வாக்குத்தத்தம் இப்போது நிறைவேற வேண்டியதாயிருந்தது, மேலும் பிதா வானவர், யோவான்ஸ்நானனின் மூலம், மேசியா தம்மைப் பின் பற்றுவோருக்குப் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பார் என்று வாக்களித்தார்: "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார்" (லூக். 3:16).[5] பரிசுத்த ஆவியானவர் வரும்போது அவர்களை வழி நடத்துவார் என்று இயேசுவே வலியுறுத்திக் கூறியதை அவர்கள் கேட்டிருந்தனர் (யோவா. 14:26; 15:26, 27; 16:12, 13; லூக். 12:12). இப்போது இயேசு, ஆவியை அனுப்பும் இந்த வாக்குத்தத்தம் "சில நாளுக்குள்" நிறைவேறும் எனக் கூறினார்.*

*இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் மற்றும் பரிசுத்த ஆவியான வரின் வருகை ஆகிய இரண்டு வாக்குத்தத்தங்களும் பிரிக்க முடியாதபடி ஒன்றுடன் ஒன்று இணைந்து இருந்தன. பரிசுத்த ஆவியானவரை அனுப்பும் வாக்குத்தத்தத்தின் நிறைவேற்ற மானது, இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் வாக்குத்தத்தம் நிறை வேறுவதற்கு அவசியமானதாகும்.*

*அப்போஸ்தலர்கள், தங்கள் சிந்தனை வேறெங்கோ இருப்பதைக் காட்டினார்கள். இராஜ்யத்தைப்பற்றிய இயேசு வின் உபதேசமானது அவர்களின் அரசியல் சார்ந்த நம்பிக் கையை உயிர்ப்பித்து எழுப்பிற்று: "அப்பொழுது கூடி வந்திருந் தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்" (வ. 6). "இஸ்ரவேல்" மற்றும் "திரும்பக் கொடுத் தல்" என்ற வார்த்தைகள் அப்போஸ்தலர்கள் எண்ணத்தைப்*

*புரிந்து கொள்ளத் திறவுகோல் வார்த்தைகள் ஆகும்: அவர்கள் இன்னும், தாவீது, சாலமோன் காலத்தில் இஸ்ரவேல் இராஜ்யத் துக்கு இருந்த மாம்சப்பிரகாரமான மகிமையை, இயேசு மறுபடியும் தருவார் என்றே எண்ணிக் கொண்டிருந்தனர்.*[6] *இதைப்பற்றி* F.F. *புரூஸ் என்பவர் இவ்வாறு எழுதுகிறார்: "அவர்களுடைய அப்போதைய கேள்வியானது, உடனடியாக ஏற்படும் தேவனுடைய ராஜ்யத்தில் அவர்களை முக்கிய நிர்வாகிகளாக ஏற்படுத்துவார் என்ற அவர்களுடைய இருதயத்தில் எரிந்து கொண்டிருந்த நம்பிக்கையின் கடைசிப் பொறியாக இருந்தது."*

*"என்று கேட்டார்கள்" என்று சொற்றொடரானது அவர்கள் இயேசுவிடம் மறுபடி மறுபடி கேட்டதைக் குறிக்கின்றது. "எப்பொழுது கர்த்தரே? எப்பொழுது?" என்று அவரைப் பதில் கூறும்படி வலியுறுத்தினார்கள்.*

*இயேசு அதற்குப் பதில் அளிக்கையில் தமது தலையை எதிர்மறையாக அசைத்திருப்பார் என்பதை என்னால் கற்பனை யில் காண முடிகிறது: "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும், வேளைகளையும்*[7] *அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பலனடைந்து'' (வ. 7, 8அ). இராஜ்யத்தின் தன்மையை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டதினால் இயேசு அவர்களைக் கடிந்து கொள்ளாமல், விரைவிலேயே*[8] *அந்த ராஜ்யத்தின் ஆவிக்குரிய தன்மையைப் பற்றி அவர்கள் தெளிவடை வார்கள் என்றார். தேவனுடைய காலநியமம் பற்றிய கேள்விக்கு இயேசு இவ்விதமாய் விடையளித்தார்: "தேவனுடைய கால நியமங்களை நான் உங்களுக்கு தரப் போவதில்லை, ஆனால், பரிசுத்த ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் பலனடைவீர்கள் - அதன் மூலம் இராஜ்யம் வந்ததை நீங்கள் அறிய முடியும்" என்றார்.*

*இராஜ்யம் பலத்தோடே வரும் என்று இயேசு கூறியதை நினைவில் வையுங்கள் (மாற். 9:1). இவ்வாறாக, பரிசுத்த ஆவியானவர் வரும்போது பலம் வரும், அதுவே தமது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் பற்றிய தேவனுடைய வாக்குத்தத்ததின் நிறைவேற்றமாகும் என்று இயேசு கூறினார்.*

*அநேகமாக, இந்த நினைவுகள் எல்லாவற்றினாலும் அப்போஸ் தலரின் தலை சுற்றியிருக்க வேண்டும்: "நீங்கள் சில நாளுக்குள்ளே*

பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்'' (வ. 4); "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பலனடைவீர் கள்'' (வ. 8). இயேசுவின் இவ்வார்த்தைகளைப் பற்றி அவர்கள் வியப்படைந்திருக்க வேண்டும்.

இவ்வியப்பான வார்த்தைகளுடன் இயேசு தமது கூற்றை முடித்து விடவில்லை. கிறிஸ்துவின் இராஜ்யத்தின் உலகளாவிய தன்மை பற்றி புரிந்துகொள்வதில் அப்போஸ்தலர்கள் சற்று இடறல் அடைந்தனர்;[9] அவர்களின் பெரிய அளவிலான கனவுகள் யாவும் பலஸ்தீனம் என்ற சிறிய நாட்டையே மையமாகக் கொண்டிருந்தது. இயேசு, ''நீங்கள் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' என்றார் (வ. 8ஆ). அநேகமாக அப்போஸ்தலர்களில் எவரும், சீரியாவின் தென்முனைக்கு வடக்கே, கலிலேயாக் கடலின் கிழக்கு கடற்கரைக்கு கிழக்கே, எகிப்திய எல்லைகளுக்குத் தெற்கே அல்லது மத்திய தரைக் கடலுக்கு மேற்கே சென்றிருக்க வாய்ப்பு எதுவும் இல்லை, இப்பொழுதோ இயேசு, அவரது உயிர்த்தெழுதலின் நற்செய்தியை எல்லா இடங்களுக்கும்[10] எடுத்துச் செல்ல அவர்கள் உலக முழுவதிலும் பயணம் செய்வார்கள் என்று கூறினார்.

இயேசுவால் வடிவமைக்கப்பட்ட இந்த செயல் திட்டம் ஒவ்வொரு தலைமுறைக்கும் சவாலாகவே இருக்கிறது: வீட்டிலே (எருசலேமில்) தொடங்கி, அருகில் உள்ள பகுதிகளில் (யூதேயா, சமாரியா) விரிவாக்கி, நிறைவாக உலகம் அனைத்தையும் (பூமியின் கடைசி பரியந்தமும்) சுவிசேஷத்தினால் அணுக வேண்டும்![11]

பூமியின் கடைசிபரியந்தமும் செல்லுகையில் அப்போஸ் தலர்கள் தமது "சாட்சிகளாய்" இருப்பார்கள் (வ. 8; லூக். 24:48) என்று இயேசு கூறினார். "சாட்சிகள்" என்பது நடபடிகள் நூலின் திறவுகோல் வார்த்தையாகும். பெயர்ச் சொல் அல்லது வினைச் சொல் என்ற விதத்தில் நடபடிகள் நூலில் "சாட்சிகள்" என்ற இந்த கிரேக்க மொழிபெயர்ப்பு வார்த்தை பலவகையில் இருபத்தோரு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது "witness", "testify" (அல்லது "testimony"), அல்லது "well spoken of" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. Martus (அல்லது martur) என்பது இதற்கு மூல கிரேக்க வார்த்தையாகும். இதில் இருந்து கிறிஸ்துவுக்கு சாட்சியாய் மரிக்கிறவர்களைக் குறிக்கும் "martyr" என்ற வார்த்தையை நாம்

பெற்றுள்ளோம்.

''சாட்சி'' என்ற வார்த்தையின் அடிப்படை விளக்கம், "கண்ணால் கண்ட சாட்சி" என்ற வார்த்தைகளினால் தரப் படுகிறது: இது ஒருவர் தாம் கண்டதை அல்லது கேட்டதைக் குறித்து கூறக்கூடிய சாட்சியமாகும் (அப். 4:20). அப்போஸ் தலர்கள் ஒரு விசேஷித்த பொருளில் சாட்சியாயிருந்தனர்: கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் அவரை அவர்கள் கண்டிருந்ததால், அவருடைய உயிர்த்தெழுதல்பற்றி அவர் களால் சாட்சியளிக்க முடிந்தது (1:22). இந்தப் பொருளில் தான் ''சாட்சி'' என்ற வார்த்தையை நடபடிகள் நூலில் லூக்கா பயன்படுத்துகிறார். நீங்களும் நானும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் கண்களால் காணவில்லையாதலால், அப்போஸ் தலர்களைப் போல சாட்சிகளாயிருக்க முடியாது.[12]

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (அப். 6:13; 13:22; 14:3, 17; 16:2; 22:12; 26:5) பற்றிய இத்தகைய சாட்சியை அல்லாமல், ''சாட்சி'' என்ற வார்த்தையின் பெயர்ச் சொல் மற்றும் வினைச்சொல் வகைகளை லூக்கா அவ்வப்போது பயன்படுத் தினார். எடுத்துக்காட்டாக, முதல் கிறிஸ்தவ வேத சாட்சியாக மரித்த ஸ்தேவான் கிறிஸ்துவுக்கு "சாட்சி" என்று அழைக்கப் படுகிறார் (22:20). ஸ்தேவான் போன்ற வகையில் (அப். 7) இன்று நாம் சாட்சிகளாயிருக்க முடியும்: தேவன் செய்ததை (விசேஷமாக நமது வாழ்க்கையில் அவர் என்ன செய்தார் என்பதை) நாம் சொல்ல முடியும்; தேவைப்பட்டால் நமது விசுவாசத்திற்காக மரணமடையவும் நாம் தயாராயிருக்க வேண்டும். இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளிலும், வெளியிலும் தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கையிடுவதே மிகவும் அத்தியாவசியமாயுள்ளது!

இக்கடினமான பணியை நிறைவேற்ற நம்மைத் தயாரிப்ப தில், இந்த அறைகூவலைப் புரிந்துகொள்ளுவதும் தேவன் அவர் எதிர்பார்ப்பதைச் செய்ய நமக்கு பலன் தருவார் என்பதை உணர்ந்துகொள்வதுமே முக்கிய பாகமாகும். அப்போஸ்தலர் களைப் போல நமக்கு அற்புத வரங்கள் இல்லை; என்றாலும் ''நமக்குள்ளே கிரியை செய்யும் வல்லமை'' நமக்கு உண்டு (எபே. 3:20)!

## மறு வருகை அறிவிக்கப்படுகிறது (1:9-11)

இயேசு அங்கிருந்து தாம் செய்ய வேண்டியவைகளைச் செய்து முடித்த அந்த நாற்பது நாட்களுக்குப் பிறகு, அவர் பரலோகம் செல்ல வேண்டிய வேளை வந்தது. லூக்கா 24:50, 51ல், "பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்" என்று குறிப்பிடுகிறது. நடபடிகள் 1ல் "இவைகளை அவர் சொன்ன பின்பு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது" என்ற வார்த்தைகளால் பரத்துக்கேறுதல் விளக்கப்படுகிறது (வ. 9).[13]

இயேசு இப்பூமியில் சஞ்சரித்த செயலானது அவரது பரத்துக்கேறும் நிகழ்ச்சியுடன் முடிவடைகிறது. அவர் தமது ஊழியத்தை நிறைவேற்றினார்; அவர் மகிமையில் (எபே. 4:10; 1 தீமோ. 3:16; 1 பேது. 3:22) மறுபடியும் பரலோக இல்லத்திற்குச் சென்றார். இருப்பினும் அவரது சீஷர்கள் கலக்கமடைந்தனர். வசனம் 10ல், "அவர் போகிற போது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இயேசு உயிர்த்தெழுந்த பிறகு, அவர் இப்படி அற்புதமாக மறைவதை அவர்கள் பார்ப்பது இது முதல் தடவை யல்ல (லூக். 24:31). அவர் உண்மையிலேயே மறைந்து போய் விட்டாரா அல்லது கடந்த நாற்பது நாட்களில் அடிக்கடி அவர் செய்து கொண்டிருந்தது போல, திடீரென்று மறுபடியும் தோன்றுவாரா என்று அவர்கள் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும் (யோவா. 20:16, 19).

அப்போஸ்தலர்கள் அதிக நேரம் ஆச்சரியப்பட்டுக் கொண்டி ருக்கவில்லை, ஏனென்றால், "இதோ வெண்மையான வஸ்திரந் தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று" (வ. 10ஆ). இவர்கள் தேவன் அனுப்பிய தூதர்கள் ஆவர்.[14] "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை[15] அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்

*கொள்ளப்பட்ட, இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (வ. 11).*

அப்போஸ்தலர்களை அறிவுப்பூர்வமாகவும், உணர்வுப் பூர்வமாகவும் ஆயத்தம் செய்ய தூதர்களின் இவ்வார்த்தைகள் முக்கிய பங்கு வகித்தன. அவர்கள் செய்தியின் முதல் பகுதி, ஒரு அறைகூவல் ஆகும். "இயேசு உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்": இயேசு சென்று விட்டார். கடந்த நாற்பது நாட்களில் நடந்ததுபோல அவர் மறுபடியும் காட்சியளிக்கப் போவதில்லை. அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார், அவரது ஊழியம் இப்பொழுது அவர்களைச் சார்ந்ததாய் இருந்தது. அச்செய்தியின் இரண்டாம் பகுதியில் ஒரு ஆறுதல் அடங்கியிருந்தது: "இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்." இயேசு பரலோகத்துக்கு ஏறிச் சென்றிருந்தாலும், ஒரு நாள் அவர் மறுபடியும் திரும்பி வருவார்! இந்த பூமியில் என்ன நடந்திருப்பினும், முடிவில் கர்த்தர் மறுபடியும் வந்து எல்லா வற்றையும் சரிக்கட்டுவார்![16] எனவே லூக்கா தமது சுவிசேஷத்தில், சீஷர்கள் "மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து" என்று குறிப்பிட்டதில் வியப்பேதுமில்லை (லூக். 24:52). வெற்றி உறுதியளிக்கப் பட்டிருந்தது!

இந்த இரண்டாம் வருகை பற்றிய வாக்குத்தத்தமே ஆதி கிறிஸ்தவர்களுக்கு மிகவும் ஆறுதல் அளிக்கக் கூடியதா யிருந்தது. அவர்கள் "மாரநாதா" (1 கொரி. 16:22) என்று தொடர்ந்து ஜெபம் செய்தனர் - "கர்த்தராகிய இயேசுவே வாரும்" (வெளி. 22:20). அந்த தூதர்கள் அப்போஸ்தலர்களிடம் இயேசு மறுபடியும் வருவார் என்றும், அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அதே விதத்தில் - எதிர்பாராமல், கண்களால் காணும்படியாக, மேகத்திலே, பலத்தோடு வருவார்[17] என்று உறுதியளித்ததை நாம் நிச்சயமாகவே நம்பலாம். முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் போலவே, நாம் இயேசுவின் இரண்டாம் வருகையை நம்புகிறவர்களா யிருந்தால், நமது வாழ்வு எவ்வளவு வித்தியாசமான தாயிருக்கும்! (2 பேது. 3:10, 11).

# முடிவுரை

இரட்சண்ய சேனை என்ற அமைப்பைத் தோற்றுவித்த வில்லியம் பூத் என்பவர் 80 வயதைக் கடந்தபோது, அவர் ஏறக்குறைய பார்வையற்றிருந்தார். வேதத்தில் அவர் மிகவும் விரும்பிய பகுதி நடபடிகள் ஆகும். அதை மறுபடி மறுபடி தமக்காகப் படிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். இறுதியாக அவர் படுத்த படுக்கையாய்க் கிடக்கையில், தமது வேதத்தை கொண்டுவரும்படி கூறினார். அவரது விரல்கள் நடபடிகள் நூலிலிருந்த தொய்ந்துபோன பகுதிகளைத் தடவிக் கொண்டிருக்க, அவர், ''மறுபடியும் இதைச் செய்யும், கர்த்தாவே, மறுபடியும் இதைச் செய்யும்'' என்று கூறினாராம்: இதை ரிக் ஆட்ச்லி தம் பிரசங்கத்தில் கூறினார்.

இயேசுவிற்குள் நாம் பெறுகின்ற ஸ்நானமாகிய உபத்திரவங்கள் என்ற பஸ்காவை அல்லாமல் நமக்கு வேறொரு பெந்தெகொஸ்தே நாளை இனி கர்த்தர் தரமாட்டார். இவை இரண்டும் ஒரே முறை நடந்த சம்பவங்கள் ஆகும். இருப் பினும் அவரது சுவிசேஷத்தை நாம் வாழும் பகுதி, நமக்கு அருகாமையில் உள்ள இடங்கள், மற்றும் உலகமுழுமையும் எடுத்துச் செல்லுகிற அவருடைய முக்கிய ஊழியத்தைச் செய்வதன் மூலம் தேவன் நமக்குள் கிரியை செய்யக் கூடும். இவ்வகையில் வேண்டுமானால் நாம், "மறுபடியும் செய்யும் கர்த்தாவே, மறுபடியும் எங்கள் மூலமாக அதைச் செய்யும்" என்று ஜெபம் செய்யலாம்.

## காட்சி-உதவிக் குறிப்புகள்

இந்தப் பாடத்திற்கு ஒரு கவன ஈர்ப்புக் கருவியாக, வசனம் 6-8 வரை பேசும்போது, அல்லது பாடத்தை முடிக்கும்போது பின்வரும் முறை கையாளப் படலாம்: ஒரு சிறிய இதய வடிவம் செய்து, அதில் ''நான்'' என்று எழுதுங்கள். பெரிய வடிவில் இதயம் ஒன்றைச் செய்து அதில் ஒரு புறம் "எருசலேம்" என்றும் மறுபுறம் "எனது சொந்த ஊர்" என்றும் எழுதுங்கள். இன்னும் பெரியதாக ஒரு இதய வடிவம் செய்து அதில் ஒரு புறம் "யூதேயா மற்றும் சமாரியா" என்றும் மறுபுறம் "எனது தேசம்"

*என்றும் எழுதுங்கள். இன்னும் பெரிய அளவில் ஒரு இதய வடிவம் செய்து அதில் ஒரு புறம் "பூமியின் கடைசி பரியந்தம்" என்று எழுதி, அதன் மறுபுறம் "உலகம்" என்று எழுதுங்கள். இவைகளை ஒரு உறையில் போட்டு அதன்மேல் "எனது இதயம் எவ்வளவு பெரியது?" என்று எழுதி வையுங்கள். அப். 1:8ஐப் பற்றி நீங்கள் பேசும் போது "எருசலேமில் பேசுமளவு எனது இதயம் பெரியதா?" என்று கேட்டு "எருசலேம்" என்று பெயரிட்ட இதய வடிவத்தை வெளியே எடுத்துக் காட்டுங்கள், அதையே திருப்பிக் காட்டி நடைமுறைப் பாடத்தைக் கொடுங்கள். இதே போல் மற்ற எல்லா இதய வடிவங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக எடுத்து பாடம் கொடுங்கள். சிறியதிலிருந்து பெரியது வரை எல்லா இதய வடிவங்களையும் மறுபடியும் எடுத்துக்காட்டுங்கள். நிறைவாக, "என்னையும் என்னைச் சார்ந்தவை பற்றியும் மட்டும் நினைக்கும் அளவே என் இதயம் உள்ளதா?" என்று கேட்டு மிகச் சிறிய இதய வடிவத்தை வெளியே எடுத்துக் காட்டுங்கள்.*

*இக்காட்சி உதவியுடன் நீங்கள் பின்வரும் சிந்தனைத் தொடரையும் பயன்படுத்தலாம். "நமது தேசத்திலேயே அநேகர் இழந்துபோன நிலையில் இருக்கையில், ஏராளமான பணம் செலவழித்து ஏன் கடல் கடந்து ஊழியம் செய்ய ஊழியர்களை அனுப்ப வேண்டும்? இதே போல் 'நமது நகரத்திலேயே இன்னும் அநேகர் இழந்து போன நிலையில் இருக்கையில் நமது தேசம் முழுமையும் செல்ல ஊழியர்களை அனுப்ப வேண்டிய அவசியம் என்ன?' என்றும் கேட்கலாம் (ஓய்வு) அல்லது 'எனக்கு இன்னும் அதிகமாய் தேவைப்படுகையில் இந்த நகரத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கப் பணத்தை ஏன் செலவு செய்ய வேண்டும்?' (ஓய்வு) என்று கூடக் கேட்கலாம். 'ஏனென்றால் நாம் கிறிஸ்தவர்கள்; அதனால்தான்' " என்பதே இக்கேள்வி களுக்கெல்லாம் எளிய பதில் ஆகும்.*

*"சாட்சி" என்ற வார்த்தைபற்றி விவாதிக்கையில் பின்வரும் காட்சி உதவி பயன்படுத்தப் படலாம்: ஒரு பெரிய அட்டையை எடுத்து அதைப் பாதியாக மடிக்கவும், முன் பகுதியில் "நீங்கள் எவ்வளவு நல்ல சாட்சியாய் இருக்கிறீர்கள்?" என்று எழுதவும். பின்புறத்தில், பத்திரிகைகளில் இருந்து வெட்டிய படத் துண்டு கள் (12 முதல் 15 வரை) சிலவற்றை ஒட்டவும். மடிப்பின் உள்*

பகுதியில் இவ்வாறு எழுதவும்: 1. தேவன் உங்களுக்குச் செய்த யாவற்றையும் நீங்கள் கண்டுணர்ந்திருக்கிறீர்களா? 2. மற்றவர் களுக்குக் கூறுகிறீர்களா? இக்காட்சி உதவியைப் பயன்படுத்தும் விதம்: முன்பக்கம் உள்ள வினாக்களை முதலில் காட்டவும். பின்பு கேட்பவர்களிடம், சில விநாடிகள் உங்களிடம் சிலவற்றைக் காட்டப் போகிறேன் அதில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நினைவில் வைக்க வேண்டும் என்று கூறவும். மடிப்பை அப்படியே திருப்பி அதில் உள்ள படங்களை ஐந்து அல்லது ஆறு விநாடிகள் அவர்களிடம் காட்டவும். பின்பு மடிப்பைத் திருப்பி வைத்துக் கொண்டு, அவர்களால் முடிந்த அளவு அதில் இருந்தவைகளை (சத்தமாக) கூறச் சொல்லவும், பிறகு பின்வரும் கருத்தை அவர்கள் மனதில் பதிய வையுங்கள்: தான் கண்டதையும் கேட்டதையும் கூறுபவரே “சாட்சி” என்று சொல்லப்படுகிறார். அப்போஸ்தலர்கள் போல நாம் சாட்சி களாயிருக்க முடியாது, என்ற கருத்தை வலியுறுத்தவும். ஆனால் நாம் கண்டவைகள் மற்றும் கேட்டவைகளுக்கு நாம் சாட்சி யாய் இருக்க முடியும். இதன் பிறகு மடிப்பைத் திறந்து நடை முறைப் பாடத்தை நடத்தவும்.

## பிரசங்கக் குறிப்புகள்

“வித்தியாசத்தைப் பற்றி சாட்சியளித்தல்” என்ற தலைப்பில் நடபடி. 1ம் அதிகாரத்திற்கு ரிக்கி ஆட்ச்லி ஒரு பிரசங்கம் செய்தார். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் ஊழியம் செய்யும் உணர்வு மற்றும் 20 நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் ஊழியம் செய்யும் உணர்வு இவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகளை அப்பிரசங்கம் எடுத்துக் கூறுவதாயுள்ளது. அவர்களின் விசுவாசத்தில் வித்தியாசம் உள்ளது. அப்பிரசங் கத்தில் மூன்று கருத்துக்கள் உள்ளன: (1) அவர்கள் இயேசு உயிர்த்தார் என்று நம்பினார்கள்; அது அவர்களுக்கு ஒரு செய்தியை அளித்தது. (2) அவர்கள் இயேசு ஆளுகிறார் என்று நம்பினார்கள், அது அவர்களுக்கு ஒரு ஊழிய நோக்கை அளித்தது. (3) அவர்கள் இயேசு திரும்பி வருவார் என்று நம்பினார்கள், அது அவர்களுக்கு ஒரு நோக்கத்தை அளித்தது.

குறிப்புகள்

[1]இயேசு முதலில் தாமே செய்து பின்பு அவைகளை உபதேசித்தார். நமது போதனை பயனுள்ளதாயிருக்க வேண்டுமென்றால் நாம் போதிப்பதின்படி முதலாவது நாம் வாழ்ந்து காட்ட வேண்டும் (1 தீமோ. 4:16). [2]1 கொரி. 15:5-8ல் உயிர்த்தெழுந்தபின் தந்த தரிசனங்கள் பற்றிய முழுமையான பட்டியல் உள்ளது. ஆனால் சுவிசேஷ நூல்களில் கூறப்படும் சில தரிசனங்கள் 1 கொரி. 15ல் கிடையாது, மேலும் பல தரிசனங்கள் பதிவு செய்யப்பட வேயில்லை. [3]யூதர்களுக்கு ராஜ்யம் மீட்டுத் தரப்படும் என்ற வாக்குத்தத்தம் பொதுவான கருத்தாய் இருந்தமையால், அதுவே, இயேசுவை அவர்கள் மேசியா என்று ஏற்றுக் கொள்ளாமைக்கு முக்கிய காரணமாயிருந்தது. இந்தக் கண்ணோட்டத்தை மிகத் துல்லியமாக அப்போஸ்தலர்கள் கொண்டிருந்தது, சுவிசேஷ நூல்களில் அவர்களின் நடக்கையைப் படிக்கையில் தெளிவாய் விளங்கும். [4]NIVமொழிபெயர்ப்பில், ‘‘ஒரு சந்தர்ப்பத்தில் அவர் அவர்களோடு போஜனம் பண்ணுகையில் …’’ என்றுள்ளது. இச்சொற்றொடரில் உள்ள வினைச் சொல்லின் பொருளை சில கல்வியாளர்கள் ஏற்பதில்லை. இயேசு தமது சீஷர்களுடன் போஜனம் பண்ணியதை நாம் அறிவோம் (லூக். 24:41-43). ஆனால் அது அவருக்குத் தேவைப்படவில்லை; மாறாக, அவர்களின் பயன்பாட்டிற்காகவே இதைச் செய்தார். இவ்வசனங்களில் லூக்கா தமது மனதில் கொண்டிருந்த காட்சியும் அதுவாகவே இருக்கலாம். [5]பரிசுத்த ஆவியையும், அக்கினியையும் யோவான் கூறினார், என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இயேசு பரிசுத்த ஆவியைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டார். யோவான் மனந்திரும்பின, மனந்திரும்பாத ஜனங்கள் அடங்கிய ஒரு கலப்புக் கூட்டத்தாருக்குப் பிரசங்கித்தார். “அக்கினி” என்று அவர் குறிப்பிட்டது மனந்திரும்பாதவர்களுக்கு வரும் தண்டனையைப் பற்றியதாகும் (லூக். 3:9, 17). “அக்கினி ஸ்நானம்” என்பது பெந்தெகொஸ்தே நாளன்று இறங்கின “அக்கினி நாவுகளை” குறிப்பதில்லை. மாறாக நரகத்தில் துன்மார்க்கருக்குக் கிடைக்கும் நித்திய தண்டனையைக் குறிக்கிறது (வெளி. 20:14, 15). [6]அப்போஸ்தலர்கள் இராஜ்யத்தின் இயல்பு பற்றிப் புரிந்து கொள்ளவில்லை என்றும், வெறுமனே அது எப்போது உண்டாகும் என்று மட்டும் கேட்டனர், என்பதாகவும் சிலர் நம்புகின்றனர். இது சாத்தியமே. ‘‘இஸ்ரவேல்’’ மற்றும் ‘‘திரும்பக் கொடுத்தல்’’ என்ற வார்த்தைகள் இராஜ்யத்தைப் பற்றிய இயேசுவின் உபதேசத்தில் அவர்கள் தெளிவற்று இருந்த நிலையைக் காண்பிக்கிறது என்றே நான் எண்ணுகிறேன். [7]“காலங்கள்” “வேளைகள்” என்பதற்கான கிரேக்க வார்த்தைகளின் பொருள் ஒரே மாதிரியாகவே உள்ளது. ஒரே எண்ணத்தை வலியுறுத்தவே இயேசு இரண்டு வார்த்தைகளையும் பயன்படுத்தியிருக்க வேண்டும். இராஜ்யத்தை தேவன் எப்போது ஏற்படுத்துவார் என்று அறிவது அவர்களுக்கு அடுத்ததல்ல. KJVயில் “the times or the seasons” என்றும் NIVயில் “the times or dates” என்றும் உள்ளது. [8]பெந்தெகொஸ்தே நாளின் சம்பவங்கள், அவர்களுக்கு இயேசுவின் உபதேசங்களைத் தெளிவாக்கியது. பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு ராஜ்யத்தை மாம்சப் பிரகாரமாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ எண்ணிய தவறை அப்போஸ்தலர்கள் செய்யவே இல்லை. [9]நடபடிகள் நூலில் அவர்கள் தொடர் செயல்கள் அவர்களின் இடர்ப்பாடுகளுக்குச்

சாட்சியாய் உள்ளது: "எருசலேமை விட்டு அவர்கள் வெளியே புறப்படு வதற்கு தேவன் அவர்களுக்கு பலத்த 'அடிகள்' தர வேண்டியிருந்தது." அவர்கள் இவ்விதமாகவே புறஜாதியாரை ஏற்றுக் கொள்ள வேண்டிய தாயிற்று. [10]பவுல் தொலை தூர நாடுகளுக்குச் சென்றதைப் பற்றி அதிகமாக நடபடிகள் நூல் நமக்குக் கூறுகிறது, ஆனால் இந்த வாக்குத்தத்தம் பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட்டதை நாம் மறந்து விடக்கூடாது. பன்னிருவரின் சுவிசேஷப் பிரயாணங்கள் பற்றி ஆதிசபை யின் பாரம்பரியங்கள் நமக்குக் கூறுகின்றன. எல்லா விஷயங்களும் அவற்றில் சரியாய் இல்லாமல் இருக்கலாம், ஆனால் இயேசுவின் செய்தியை எடுத்துக்கொண்டு அவர்கள் தூர தேசங்கள் சென்றது நிச்சயமாகவே உண்மையாகும்.

[11]இவ்வுலகில் இந்த மாதப்பிரதிகளை பெற்றுக் கொள்ளும் அநேக இடங்களில் "ஊழிய இடங்கள்" பற்றிய எண்ணங்கள் இன்னும் உள்ளன. "ஊழிய இடங்கள்" என்ற இக்கருத்து தேவனுக்கு உகந்ததாய் இருக்க வேண்டும் என்றால், ஆரம்ப முதலே தேவனுடைய பிரதான கட்டளையை நிறைவேற்றும் வகையில் செயல்பாடுகள் அமைய வேண்டும். [12]அப்போஸ தலர்கள் போலவே நாம் சாட்சிகளாயிருக்க முடியாது என்பதால், சிலர் "சாட்சிகள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தவே தயங்குகின்றனர். இவ்வார்த்தை இன்றைய கிறிஸ்தவர்களுக்கு ஏற்புடையதல்ல என்றெண்ணு கின்றனர். அடிப்படையில் இவ்வார்த்தையை லூக்கா, அப்போஸ்தலர்களின் செயல்பாட்டைக் குறிக்கப் பயன்படுத்துவதால், "சாட்சி" என்ற இவ்வார்த்தை இயேசுவைப் பற்றி நாம் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளும் விஷயத்தில் பயன்படுவதில்லை. ஆனாலும் லூக்கா சில சந்தர்ப்பங்களில் இவ்வார்த்தையை வேறு வகையிலும் பயன்படுத்துவதால் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு சில சமயங்களில் இவ்வார்த்தையைப் பயன்படுத்துவதை நாம் மறுக்கக் கூடாது. [13]சிலர் இயேசுவானவர் "மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார்" என்ற உண்மையைக் குறித்துக் கவலைப் படுகின்றனர்; இது பரலோகம் "மேலே" உள்ளதாக ஒரு கருத்தை வலியுறுத்துவதாக அவர்கள் நினைக்கின்றனர் (நரகம் என்றால் "கீழே" உள்ளதா?) ... ஆனால், இயேசு இவ்வுலகத்தைவிட்டுச் சென்ற விஷயத்தை மனித இருதயங்களுக்கு வேறு எந்த வகையில் தேவன் புரிய வைக்க முடியும் என்று எண்ணிப் பாருங்கள். "மேலே" என்பதைத் தவிர வேறு எந்த திசையில் அவர் செல்ல முடியும்? [14]இது தூதர்களைக் குறிப்பிட லூக்கா பயன்படுத்திய வழிகளில் ஒன்று ஆகும் (லூக். 24:4). ஒரு வேளை அவ்விரு தூதர்களும் "இரண்டு சாட்சிகளா" யிருக்கலாம் (உபா. 19:15). [15]"வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்ததற்குப்" பதிலாக சீஷர்கள் எருசலேமுக்குத் திரும்பச் சென்று வேலைகளைச் செய்திருக்கலாம் என்று சில பிரசங்கியார்கள் குறிப்பிடு வதுண்டு. ஆனால் பின்வருவதை சீஷர்கள் விளக்கினர்: "சிலர் அதிகமாக பரலோக சிந்தனை உள்ளவர்களாய் இருக்கின்றபோது பூமிக்குரியவற்றில் அவர்கள் சிறந்து விளங்குவதில்லை." [16]வல்லமை வாய்ந்த எதிரியோடு மோதும் ஒரு சிறு படையை இதற்கு ஒப்பிடலாம். ஆனாலும் அந்தச்சிறு படை தங்களுக்கு உதவியாக மாபெரும் படை வருவதை அறிந்தவர்களாய் யுத்தம் செய்து கொண்டுள்ளனர். [17]சிலர் கர்த்தரின் மறுவருகையின் நாளை அறிவித்து அந்நாளில் அவர் வராமல் போகவே சங்கடத்திற்குள்ளாயினர்.

பின்பு அவர்கள், தெரிந்துகொள்ளப் பட்ட சிலருக்கு மட்டும் கர்த்தர் அந்நாளில் தரிசனமானதாவும், பின்பு பரலோகம் சென்று விட்டு மறுபடி ஒரு நாள் திரும்பி வர முடிவு செய்ததாகவும் கூறினர். நட. 1:11ல் இரண்டாம் வருகைபற்றி கூறும் கூற்றானது இவ்வித சுய நிலை விளக்கங்களைத் தவறாக்குகிறது (1 தெச. 4:16).